Book 23

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்

நீர் கேட்பீராக ; "கடவுள் தன் அடியார்களுக்கு வெளிப்படுத்தியுள்ள

அழகையும், உணவு வகைகளில், தூய்மையானவற்றையும் தடுத்தது யார்?"

என் ரட்சகர் ஹராம் என தடுத்திருப்பவையெல்லாம்

1. வெளிப்படையான, அந்தரங்கமான,

மானக்கேடான செயல்கள், பாவங்கள்

2. நியாயமின்றி கொடுமை செய்வது

3. ஆதாரமில்லாத பொழுதும் கடவுளுக்கு இணை கற்பித்தல்,

4. நீங்கள் அறியாதவற்றை கடவுளின் மீது பொய்யாகக் கூறுவது

எனக் கூறுவீராக.

ஜூலை
2001
July

PUTHIYA NINAIVOOTAL
TAMIL MONTHLY

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)


# புதிய நினைவூட்டல் மாத இதழ்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி

| செய்தி 2 | ஜுலை 2001 | நினைவு 6 |
|---|---|---|

ஆசிரியர் :
C.S. ரஃபியுத்தீன்

துணை ஆசிரியர் :
N.A. அஹமது ஹுஸைன்

தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்


**இதழின் உள்ளே**


★ ஹலால், ஹராம்

★ குர்ஆனை கற்றுக் கொள்ளுங்கள்

★ கருணைக்கடவுள்


*15* பக்கதொடர்ச்சி...

*b.* அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ் - 32க்குச் செல்லவும்

*c.* அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் வஅஷ்ஹது அன்ன முஹம்மதுர் ரசூலுல்லாஹ் வஅஷ்ஹது அன்ன அலிய்யுன் வலியயுல்லாஹ் -36க்குச் செல்லவும்

40. நல்லது இங்கே நாம் முடித்துக் கொள்கிறோம் மிகச் சுருக்கமான வழி

**I -> I3 -> 7 -> 3 ->2 -> 10 - 20 -> 6-> 15 ->23 -> 29 -> 21 -> 12 -> 30 - 33 - 26 -> 37 -> 16 -> 27 -> 38 --> 39 -> 32 மற்றும் 40 ஆகிய 23 படிகள் கொண்ட**

முடிப்பதற்கு முன் ஒரு விஷயம் என்ன செயலைச் செய்தால் இறைவன் நமக்கு அளித்துள்ள அருட்கொடைகளைத் தக்க வைத்துக் கொள்வதோடு அதனை அதிகப்படுத்தியும் கொள்ள முடியும் அறிந்து கொள்ள 34க்குச் செல்லவும்.

ஆ-ர்

# அஇது ஹராம் / ஹலால்

**NAJ ABUESA - DUBAI**

இந்த சொற்றொடர் நீங்கள் பலமுறை கேட்ட ஒன்றாக இருக்கலாம்

நீங்கள் ஒரு முஸ்லீமாக இருப்பின் பலரும் பலமுறை வேடிக்கையாகவும், விளையாட்டாகவும் தினசரி தங்கள் வார்த்தைகளில் ஒன்றாக உபயோகித்துத் கொண்டிருப்பதைக் காணலாம். பள்ளிகளில், பெற்றோரிடத்தில் தனது மௌலவிகளிடத்தில், நமது சமுதாயத் தலைவர்களிடத்தில் என பலவகைகளில் நாம் இந்த வார்த்தைப் பிரயோகத்தை கேட்டு கொண்டு இருக்கிறோம். இன்னும் இந்த விஷயத்தினை அடிப்படையாக கொண்டு பல்லாயிரக்கணக்கான புத்தகங்கள் டன் கணக்கில் எழுதப்பட்டிருக்கிறது எனலாம். இவைகளையெல்லாம் நிறுத்தால் நிச்சயம் அது நம்மை ஆச்சிரியத்திற்கு இட்டுச் செல்லும்.

இப்பொழுது நான் ஒன்று சொல்லுவேன் நீங்கள் நம்ப மறுக்கலாம். ஆனால் அது உண்மை ,

வழமையான இஸ்லாத்தைச் சொல்லும் ஏதாவது ஒரு இணையதளம் சென்று அதில் கேள்வி & பதில் பகுதியை கிளிக்கினால் (அல்லது பத்வா பகுதி) நீங்கள் பல ஆச்சர்யங்களை கண்ணுறலாம் அவற்றில் ஒன்று இதோ.,

பன்றி கறி சூடு செய்யப்பட்ட மைக்ரோவேவ் ஓவனில் நாம் சமைத்து சாப்பிடுவது ஹராமா?

இப்படிபட்ட கேள்விகள் எல்லாம் நமது பத்திரிக்கைகளிலும், இணையதளங்களிலும் கேட்கப்படுவது உங்களுக்கு வேடிக்கையாக கூட இருக்கும், இது தான் உண்மை . இந்த இரு வார்த்தைகளும் மிகப் பொதுவானதாக மக்களிடையே மிகவும் சகஜமான முறையிலே பிரயோகப்படுத்தக் கூடியதாகவும் இருக்கிறது. பலரை நீங்கள் கண்டிருக்கலாம் அவர்கள் எதை எடுத்தாலும் இது ஹராம் அது ஹராம் என மிகவேடிக்கையாக கூறுவது போல் ஆனால் தீவிரமாக எடுத்தோதுவார்கள் இவர்கள் தங்களுக்கு, எதை பிடிப்பதில்லையோ, விரும்புவதில்லையோ எதை அவர்தம் மனம் தவறு என்கிறதோ அதையெல்லாம் ஹராம் என சொல்லத் தலைபடுவார்கள் இவற்றில் இவர்கள் எந்த விதமான சிந்தனையும் செய்யாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வளவு தூரம் வந்து விட்டோமே! உண்மையில் இந்த இரு பெரும் வார்த்தைகளின் அர்த்தம் தான் என்ன? இவைகளை பற்றி குர்ஆன் என்ன கூறுகிறது? எவை தான் ஹலால்? யார் இதைப் பகுப்படுத்துவது? என்ற கேள்விகள் நம்மைச் சூழ்ந்து கொள்ளலாம். நமது புத்தகமாகிய குர்ஆனில் பதில்கள் அவ்விடம் நிறையவே உண்டு

ஹலால் என்ற அரபிப் பதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது, அனுமதிக்கப்பட்டது, சட்ட நியதிக்குட்பட்டது என அர்த்தம் தரும் ஒரு வார்த்தை . ஹராம் என்பதோ இதன் எதிரிடையான பொருள் தரும்; விலக்கப்பட்டது, தடுக்கப்பட்டது என அர்த்தம் தரும் ஒரு வார்த்தை. இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று நேர் முரணாக எதிர்பதமாக கடவுளின் வேதமான குர்ஆன் முழுவதும் விரவிக் கிடக்கிறது

இவை வல்ல இறைவனால் பிரயோகப்படுத்தப்படும்பொழுது அது அவரைத் தவிர வேறு எவராலும் மாற்றப்பட, திருப்பிப்பெறப்பட திருத்தப்பட இயலாததாகி விடுகிறது ஆக எவையெவையெல்லாம் அவரால் தடுக்கப்பட்டதே அது அவ்வாறும் எவையெவையெல்லாம் அவரால் அனுமதிக்கப்பட்டதோ அது அவ்வாறும் நிலைத்திருக்கும்

இதை விவரிக்க இறைவனால் விதிக்கப்பட்ட அனுமதி ஒன்றினை நபி முகம்மது தனது மனைவியரைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக அதை தடுத்துக் கொண்டபோது அவரை எச்சரிக்கும் ஒரு வசனம் நமக்கு உதவும்

நபியே உம் மனைவியரின் திருப்தியை நாடிக் கடவுள் உமக்கு அனுமதித்துள்ளதை (அகால்) ஏன் விலக்கிக் கொண்டீர் (துஹ்ரிம்) கடவுள் மிகவும் மன்னிப்பவர். மிக்க கிருபையுடையவர். கடவுள் உங்களுடைய சத்தியங்களை திரும்ப பெறுவது எவ்வாறு என்பதை விதித்துள்ளார். மேலும் கடவுள் உங்கள் எஜமானர், மேலும் அவர் நன்கறிந்தவர், ஞானம் மிக்கவர் (66:1-2) இதில் நாம் நமது இறைவனால் அனுமதிக்கப்பட்ட ஒன்றை நபி முகம்மது தடுத்துக் கொண்டதாக ஆக்கி கொண்டதை எச்சரிப்பதையும் அது சரிசெய்யப்பட்டு உறுதி செய்யப்படுவதையும் காணலாம்.

நபி அவர்களே எச்சரிக்கை செய்யப்படும் பொழுது நமது நிலைதான் என்ன? யோசிக்கவேண்டும் தோழர்களே!

உங்கள் நாவுகள் பொய்யாக வர்ணிப்பது போல், இது ஹலாலானது, இது ஹராமானது என கடவுளின் பெயரால் பொய்களை இட்டுக் கட்டாதீர்கள். நிச்சயமாக எவர்கள் கடவுளின் மீது பொய்யை இட்டுக் கட்டுகிறார்களோ அவர்கள் வெற்றியடைய மாட்டார்கள். இவர்களுக்கு சொற்ப இன்பம் தான் இவர்களுக்கு நோவினை செய்யும் வேதனை உண்டு (16:116-117)

இம்மாபெரும் ஆபத்தை விளைவிக்கும் இவ்விரு வார்த்தைகளைத்தான் நாம் மிக வேடிக்கையாக ஆனால் ஆணித்தரமாக, உபயோகப்படுத்திக் கொண்டு வருகிறோம். கடவுளின் பெயரைக் கொண்டு பொய் சொல்லி மக்களை வழி கெடுப்பவர்கள் நிச்சயமாக தாங் கொணாத துயரத்தை, நம்மைப்படைத்த இறைவனின் முன்பு நாட்களில் மிகப் பெரிய நாளாகிய அந்த நாளில் அனுபவிக்க தயாராக இருந்து கொள்ளட்டும். இதை தவிர அவர்கள் வேறு விதமான எந்த விளைவை தான் சந்திக்கநேரும். இன்னும் பாருங்கள் (10:59-60)

நீர்கேட்பீராக கடவுள் தன் அடியார்களுக்கு வெளிப்படுத்தியுள்ள அழகையும், உணவு வகைகளில் தூய்மையானவற்றைதயும் தடுத்தது யார்? (7:32)

இதன் பிறகும் இவ்விரட்டை வார்த்தைகளை யாரேனும் தவறாக உபயோகிப்போமேயானால் இதன் தீவிரம் மிகக்கடுமையாக எதிரொலிக்கும் என்பதை நினைவில் கொள்வோமாக.

இப்படித்தான் நாங்கள் பொய் சொல்லித் திரிவோம் என்பவர்களை விட்டு நமது விஷயத்திற்கு வருவோம்

சரி! கடவுள் எவையெல்லாம் நமக்கு அனுமதிக்கப்பட்டதாக கூறுகிறார்? எவையெல்லாம் நமக்கு தடுக்கப்பட்டதாக கூறுகிறார்? அறிந்து கொள்ள வேண்டுமா? புரட்டுங்கள் குர் ஆனின் பக்கங்களை அங்கு நீங்கள் எதிர்பார்ப்பதைவிட மிக இலேசாக உங்களுக்கு பதில்கள் அமைந்திருக்கின்றது. இது மிகவும் மகிழ்ச்சிதரக்கூடிய செய்தியே.

## ஹராம்! (விலக்கப்பட்டவை)

1. பொதுவாக விலக்கப்பட்டவை

சொல் வீராக வாருங்கள், உங்கள் இறைவன் உங்கள் மீது விலக்கியவற்றை நான் படித்துக் காண்பிக்கிறேன்.

a. அவருக்கு எதையும் இணையாக்காதீர்கள்.

b. பெற்றோர்களுக்கு நன்மை செய்யுங்கள்.

c. வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள் - ஏனெனில் உங்களுக்கும் அவர்களுக்கும் நாமே உணவளிக்கிறோம்.

d. வெளிப்படையான / இரகசியமான / மானக்கேடான காரியங்களை நீங்கள் நெருங்காதீர்கள். (6:151)

e. கடவுள் தடுத்துள்ள எந்த ஒர் ஆத்மாவையும் நீதிக்கு மாறாக கொலை செய்யாதீர்கள்-இவற்றை நீங்கள் உணர்ந்து கொள்வதற்காக உங்களுக்கு போதிக்கிறார். (66:152)

f. அனாதையின் பொருள் பக்கம் அவர்கள் பிராயத்தை அடையும் வரையில் நியாயமான முறையிலன்றி நீங்கள் நெருங்காதீர்கள்

g. அளவையும், நிறுவையையும் நீதத்தைக் கொண்டு அளவுங்கள் நாம் எந்த ஆத்மாவையும் அதன் சக்திக்கு மீறி கஷ்டப்படுத்துவதில்லை.

h. நீங்கள் பேசும் பொழுது அதனால் பாதிக்கப்படுபவர் நெருங்கிய உறவினராக இருந்தபோதிலும் நியாயமே பேசுங்கள்

I. கடவுளின் பெயரால் நீங்கள் எடுத்த வாக்குறுதிகளைநிறைவேற்றுங்கள்

நீங்கள் நினைவு கொள்ளும் பொருட்டே கடவுள் இவ்வாறு போதிக்கிறார் இன்னும் 7:33ல் என் இறைவன் - ஹராம் என தடுத்திருப்பவையெல்லாம்

1. வெளிப்படையான, அந்தரங்கமான, மானக்கேடான செயல்கள், பாவங்கள்,

2. நியாயமின்றி கொடுமை செய்வது,

3. ஆதாரமில்லாத பொழுதும் கடவுளுக்கு இணைகற்பித்தல்,

4. நீங்கள் அறியாதவற்றை கடவுளின் மீது பொய்யாகக் கூறுவது எனக் கூறுவீராக.

<u>**உணவு வகைகள்:**</u>

1. நபியே நீர் கூறும் : தானாக இறந்தவையும்,
2. ஒடும் இரத்தத்தையும்,
3. பன்றியின் மாமிசத்தையும் இது அசுத்தமானதால்,
4. கடவுளின் பெயர் அல்லாதவை கூறி அறுக்கப்பட்டதும் இது பாவமாயிருப்பதால் தவிர, வேறொன்றையும் எனக்கு அருளப்பட்டதில் தடுக்கப்பட்டதாக நான் காணவில்லை.

ஆனால் எவரேனும் நிர்பந்திக்கப்பட்டு வரம்பு மீறாமல், பாவம் செய்ய கருதாமல் புசிக்கிறார்களோ, நிச்சயமாக இறைவன் மிக்க மன்னிப்பவராகவும், பெருங்கருணையுடையோராகவும் இருக்கிறார் எனபதாக அறிந்து கொள்ளட்டும் 6:145

இன்னும்

இஹ்ராம் சமயத்தில் வேட்டை ஆடுவது (உணவிற்காக) (5:l)

மேலும்

1. தானாகச் செத்தது, 2. இரத்தம், 3. பன்றியின் இறைச்சி, 4. கடவுள் அல்லாததின் பெயர் கூறி அறுக்கப்பட்டது, தானாகக் செத்தது என்பது 5. கழுத்து நெறித்துச் செத்தது, 6. அடிபட்டுச் செத்தது, கீழே விழுந்தும் கொம்பால் முட்டப்பட்டும் விலங்குகள் கடித்துச் செத்தவையும், 7. (சாவதற்கு முன்னர்) நீங்களாக அறுத்தது தவிர, 8. பலிபீடங்களில் பிறருக்காக நேர்ந்து விடப்பட்டதும்.... (5:3)

**<u>3. திருமண உறவு முறைகள் :-</u>**

2:230 : மீட்ட இயலாதபடி தலாக் கூறப்பட்ட பெண் (மனைவி)
2:187: இஃதிகாபில் இருக்கும் பொழுது மனைவியருடன் கூடுவது.
4:19 பெண்களை பலவந்தப்படுத்தி திருமணம் செய்வது
4:23 - உங்களுக்கு மணமுடிக்க விலக்கப்பட்டவர்கள்

1. உங்கள் தாய்மார்கள்
2. உங்கள் புதல்வியர்
3. உங்கள் சகோதரிகள் வாடி பார்த்துக்கியப்பா
4. உங்கள் தந்தையின் சகோதரிகள் ரியல்
5. உங்கள் தாயின் சகோதரிகள்
6. உங்கள் சகோதரனின், சகோதரிகளின் புதல்விகள்
7. பாலூட்டிய தாய்மார்கள்
8. உங்கள் பால்குடி சகோதரிகளும்
9. உங்கள் மனைவியரின் தாய்கள்
10. நீங்கள் ஒரு பெண்ணை விவாகம் செய்து அவளுடன் சேர்ந்து விட்டால் அவளின் முந்தைய கணவனுக்குப்பிறந்த பெண்கள் - இல்லற வாழ்வில் இணையாமல் இருக்கும் நேரத்தில் உங்கள் மீது குற்றமில்லை
11. உங்களுக்கு பிறந்த மகன்களின், மகள்களின் குழந்தைகள்.
12. இரண்டு சகோதரிகளை ஒரே நேரத்தில் ஒன்று சேர்வதும் விலக்கப்பட்டது - இது முடிந்துவிட்ட காரியத்தில் தவிர - நிச்சயமாக கடவுள் மன்னிப்பவரும் கருணையுடையவருமாய் இருக்கிறார்
13. கணவனுள்ள பெண்களை - போரில் உங்களிடம் வந்த நிராகரிப்பாளரின் மனைவியைத் தவிர-உங்களுக்கு விலக்கப்பட்டுள்ளது

உங்கள் மீது கடவுளால் இவை விதியாக்கப்பட்டுள்ளவையாகும்....
2:221 இணைவைக்கும் பெண்- அவள் நம்பிக்கை கொள்ளாத வரை விலக்கப்பட்டது, 24:3. விபச்சாரம் செய்யும் பெண்களை

## 4. உறவு முறைகளில்:

2:85.... ஆனால் அவர்களை வெளியேற்றுவது உங்கள் மீது தடுக்கப்பட்டதாகும்

## 5. வியாபார நடைமுறைகள் :-

2 : 275.... கடவுள் வியாபாரத்தை ஆகுமாக்கி கடும்வட்டியை விலக்கியிருக்கிறார் .

இன்னும் அதிகமாக அறிய வேண்டும் என்றால் இவ்வசனங்களை ஆழ்ந்து முன்பின் தொடராக படித்தீர்களேயானால் உங்கள் இறைவன் விலக்கியவைகளை எல்லாம் உணரலாம் அவை 2:168,2:85, 2:187,2:228, 2:229, 2:230, 3:93, 4:19, 4:23, 4:24, 4:31, 4:160, 5:1-5, 5:87, 5:88, 5:96 6:119, 6:138-140, 6:143-146, 6:150-151, 7:32, 7:165, 8:69, 9: 29, 10:59 ,16:114,116,118, 22:30,33:38 33:50, 33:52, 60:10, 66:1, 22:50, 24:3, 5:90

மேலும் இவ்வசனங்கள் நமக்கு தெரியப்படுத்துவதெல்லாம் யாருக்கும் கடவுள் தவிர- எதையும் விதிக்கும் அதிகாரம் இல்லையென்பதனையும் இன்னும் அதற்காக நாம் மிகப் பெரிய விலை கொடுக்க வேண்டியிருக்கிறது என்பதும்தான்

## ஹலால் (அனுமதிக்கபட்டது )

சரி, ஹலால் எவையென்பதைப் பார்ப்போமா? மிகவும் எளிதாகச் சொல்வதானால் எவையெல்லாம் விலக்கப்பட்டிருக்கிறதோ அவைதவிர மற்றவை யெல்லாம் ஹலால் என்பதே. நாம் இறைவனின் அதிகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு பொய்யாக நமது மனம் விரும்பினாற்போல் எதையும் இது ஹராம், என சொல்லக் கூடாது என்பதனை எப்பொழுதும் நினைவிலிருத்திக் கொள்வோமாக. இனியும் உங்களிடம் யாரும் இது ஹராமா? என வினவினால் கடவுள் தடுத்தவற்றைத்தவிர- ஏனையவற்றைத் தடுக்க யாருக்கும் அதிகாரம் இல்லை என்பதை மறக்காமல் சொல்வீர்களா?

3:94 இதன் பின்னரும் எவரேனும் ஒருவர் கடவுளின் மீது பொய்யாக கற்பனை செய்து கூறினால் நிச்சயமாக அவர்கள் அக்கிரமக்காரர்களே ஆவார்கள்

வல்ல இறைவன் நம் அனைவரையும் ஒருமித்த பாதையில் நடக்கச் செய்வாராக!

# குர் ஆனைக் கற்றுக் கொள்ளுங்கள்

முஸ்லிம்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் முஹம் மதியர்கள் குர் ஆனை (கடவுளின்) அல்லாஹ்வின் வார்த்தைகள் என்று நம்புவதாகக் கூறிக் கொண்டாலும் அவர்களில் மிகச் சிலரே குர்ஆனை அதன் மொழிபெயர்ப்புக்களில் முழுவதுமாகப் படித்திருப்பார்கள். இந்த யதார்த்த நிலை அவர்களுடைய கூற்று பொய்யானது என்பதை எடுத்துக்காட்டுகிறது, குர்ஆனைக் கடவுளின் வேதம் என்று உண்மையில் நம்புபவர் குர்ஆனைக் கற்றுக் கொள்ள நேரம் ஒதுக்கி அதனைக் கற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும். இது குர்ஆனைக் கற்றுக் கொள்ளும் அத்தகைய முயற்சியே.

1. நூஹ் நபியின் (Noah) மனைவி

| | | |
|---|---|---|
| a. | ஒரு நம்பிக்கை கொண்ட நல்ல பெண்மணி | - 5க்கு செல்லவும் |
| b. | பற்றி எனக்குத் தெரியாது | - 9க்குச் செல்லவும் |
| c. | ஒரு நிராகரிப்புக் கொண்ட தீய பெண் | - 13க்குச் செல்லவும் |

2. இரும்பை உருக்கி ஆயுதங்கள் செய்யும் கலை சுலைமானின் மகன் தாவூதுக்கு வழங்கப்பட்டது. இவ்வாசகம்

| | | |
|---|---|---|
| a) | தவறு | - 10க்குச் செல்லவும் |
| b) | சரி | - 14க்குச் செல்லவும் |

3. மிகச் சரி - பின்னர் தன் தவறை உணர்ந்து வருந்தி அக்குதிரைகளை அவிழ்த்து விரட்டி விட்டு விடுவதையும் குர் ஆன் கூறுகின்றது. (பார்க்க 38:31-33.) 2க்குச் செல்லவும்

4. தவறு - தவ்றாத் என்பது மூஸாவுக்கு வழங்கப்பட்ட வேதம் என்றே பெரும்பான்மையான முஸ்லிம்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆயினும் குர்ஆனில் எங்கேயும் அவ்வாறு கூறப்படவில்லை. அவர்கள் செவிவழிச் செய்திகளைத் தவிர வேதத்தை உண்மையில் அறிந்திருக்க வில்லை என்பது தெளிவாகிறது. 20க்குத் திரும்பிச் செல்லவும்.

5. ஆரம்பமே தவறு! நீங்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். நபிமார்களின் மனைவியர் அனைவரும் மிக நல்லவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு மூடப்பட்ட மனம் உங்களுக்கு இருக்கலாம். அறிந்து கொள்ளுங்கள். மூடப்பட்ட மனம் என்பது இறை சாபம் ஆகும். (2:88) நூஹின் மனைவியைக் நிராகரிப்புக் கொண்ட கெட்ட பெண்மணிகளுக்கு உதாரணமாகக் கடவுள் கூறுகிறார். (66:10) நபிமார்களுடனும் தூதர்களுடனும் கூட இருந்தவர்களும். அவர்களுடைய உறவினர்களும் நல்லவர்களாகத் தான் இருப்பார்கள் என்ற நியதி எதுவும் இல்லை. 1க்குத் திரும்பிச் செல்லவும்

6. சரியான பதில் - 15:44ன் படி தவ்றாத் என்பது இயேசுவுக்கு முன்னர் ba இஸ்ராயீலின் (யாக்கூப்) சந்திதியில் வந்த அனைத்து நபிமார்களுக்கும் இக்கு வழங்கப்பட்ட வேதங்களின் தொகுப்பே ஆகும். 15க்குச் செல்லவும்

7. சுலைமான் (Solomon) ஒரு நாள் தன்னுடைய மாலைத் தொழுகையைத் தவறவிட்டதன் காரணம்



a. குதிரைகள் மேல் அவர் கொண்ட மோகம் - 3க்குச் செல்லவும்

b. அவருடைய தொழுமிடத்தில் திடிரென நுழைந்த இரு வழக்காளிகள் - 11 க்குச் செல்லவும்

8. தவறு. யூஸுஃப் இஸ்ராயீலின் மகன். ஆயினும் தவ்றாத் என்பது அவருக்கு அருளப்பட்ட வேதம் மட்டும் என்பது தவறாகும் - 20க்குத் திரும்பிச் செல்லவும்

9. நீங்கள் குர் ஆனை இன்னும் அதிகமாகக் கற்க முயல வேண்டும். ஆயினும் யூகங்கள் செய்யாமல் தெரியாதவற்றைத் தெரியாது என்று கூறுவதே சிறந்த செயலாகும். எல்லாவற்றையும் அறிந்தவர் கடவுள் மட்டுமே. வானவர்களுடைய அறிவும் ஒரு எல்லைக் குட்பட்டதே என்று குர்ஆன் கூறுகின்றது, மேலும் கற்க ( 2:31-32) - க்குத் திரும்பிச் செல்லவும்.

10. நீங்கள் கவனத்துடன் இருக்கின்றீர்கள். வாழ்த்துக்கள். அவ்வாசகத்தில் குறிப்பிட்டுள்ளபடி தாவூதுக்கு இரும்பை உருக்கி ஆயுதங்களும், சாதனங்களும் செய்யும் கலை கற்றுக் கொடுக்கப்பட்டது சரியான தகவல் தான். ஆயினும் சுலைமானின் மகன் தாவூது என்பது தவறாகும் தாவூதின் மகன் சுலைமான் என்பதே சரியாகும் -20க்குள் குதிக்கவும்.

11. தவறு. தொழுமிடத்தில் திடீரென நுழைந்த இரு வழக்காளிகளைக் கண்டு திடுக்குற்றது தாவூதே, தவிர தொழுகை எதனையும் அவர் அதனால் தவறவிட்டுவிடவில்லை -7க்குத் திரும்பச் செல்லவும்

12. சுவனத்தில் நுழையும் தகுதி பெற்றவர்கள்

a. யூதர்களும் கிறித்துவர்களும் மட்டுமே - 25க்குச் செல்லவும்

b. படைத்த ஒரே கடவுளை நம்பி, மரணத்திற்குப் பின் அவர் நம்மை விசாரிப்பார் என்றும் நம்பி நல்லர்களாக வாழ முயற்சிக்கும், வாழும் அனைவரும். - 30க்குச் செல்லவும்

c. முஸ்லிம் சமுதாயத்தினர் மட்டுமே -35க்குச் செல்லவும்

13. மிக நல்லதொரு துவக்கம் நூஹின் மனைவியைப் பற்றி இறைவன் கூறியதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். நீங்கள் அறிந்து வைத்திருக்கும் குர்ஆனின் சாரம் கடவுள் மட்டுமே என்பது தான் என்பதை நீங்கள் அறிவீர்களா? அறிந்திருந்தால் கவப்பற்ற ஓரிறைக் கொள்கையை மற்ற மனிதர்களுக்கு எடுத்துக் கூறுகின்றீர்களா? -7க்க்ச் செல்லவும்.

14. தவறு நீங்கள் அவசரப்படக் கூடாது தாவூதுக்கு இரும்பை உருக்கும் கலை கற்றுக் கொடுக்கப்பட்டதை நினைவில் வைத்திருக்கும் நீங்கள் தாவூதின் மகன் தான் சுலைமான் என்பதை நினைவில் வைத்து கொள்ள காய வேண்டும் -2க்குத் திரும்பச் செல்லவும்

15. யூசுஃப் சிலகாலம் அதிகமாக சிறையில் இருக்க வேண்டியதாயிற்று ஏன்?

a . அவருடைய சிறைத்தோழன் அவனுடைய அதிபதியான (ரப்பு) அரசரிடம் யூசுஃபைப் பற்றிக் கூற மறந்து விட்டதால் - 17க்குச் செல்லவும்

b. யூசுஃப் அவருடைய இரட்சகரான (ரப்பு) கடவுளிடம் முறையிட மறந்து தனது சிறைத் தோழனிடம் நீ அரசரிடத்தில் என்னைப் பற்றி எடுத்துக்கூறு என்று கேட்டுக் கொண்டதால் - 23க்குக் குதிக்கவும்

16. ரொம்பச் சரி. 8:33 ல் கடவுள் கூற்றுப்படி மனிதர்கள் பாவமன்னிப்புத் தேடிக் கொண்டிருக்கும் போது அவர்களை அவர் வேதனை செய்வதில்லை. தண்டிப்பதில்லை என்று நாம் கற்றுக் கொள்கிறோம் 27ஐ முயற்சிக்கவும்

17. பாரம்பர்ய முஸ்லிம்களின் குர் ஆன் மொழி பெயர்ப்புகளில் இந்த மொழிபெயர்ப்புத்தான் காணப்படுகின்றது. எனினும் இது சரியானதல்ல

உண்மையில் மேற்கண்ட மொழிபெயர்ப்பு அவர்கள் குர்ஆனின் கருத்துக்களைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது மேலும் உளத்தூய்மை உடையோர் மட்டுமே குர்ஆனைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியும் (17:45,18:57) (56:79) என்று குர்ஆனில் கடவுள் கூறுவதை நினைவில் கொண்டு சிந்தித்துப் பாருங்கள் யூஸுஃப் தன்னுடைய சிறைத் தோழனிடத்தில் அரசரிடம் தனக்காகச் சிபாரிசு செய்யும் படி கேட்டுக் கொண்ட போது அவர் சிறையிலிருந்து விடுதலை பெற இறைவனை விடுத்து மற்றவர்களைச் சார்ந்திருப்பதை வெளிப்படுத்துகின்றார். இச்செயல் ஒரு உண்மை நம்பிக்கையாளனுக்குத் தகுமானதல்ல. யூஸுஃப் மனதாரச் செய்த இந்தத் தவறுதான் யூஸுஃப் சிறையில் சிலகாலம் அதிகமாக இருக்க வேண்டி வந்ததன் காரணம் வன் என்பதே சரியான மொழி பெயர்ப்பாகும் 15க்கு மீண்டும் செல்லவும்.

18. தவறு நோன்பைப் பற்றியும் தொழுகையைப் பற்றியும், ஹஜ்ஜைப் பற்றியும் அதன் பலன்கள் பற்றியும் கடவுள் குர் ஆனில் கூறுவதைப் போதுமானதாகக் கருதாமல் பொய்யர்கள் குர்ஆனில் இல்லாத பல சிறப்புக்களை ஹதீஸ்களின் மூலம் மேற்கண்ட (அமல்களுக்கு) நற்செயல்களுக்குக் கற்பித்துள்ளனர். எந்தச் செயலுக்கு என்ன சிறப்பு அல்லது என்ன பலன் என்பதை கடவுள்தான் நம்பிக்கையாளர்களுக்குக் கூறவேண்டும். எனவே அவர்கள் குர் ஆனை மட்டும் ஆதாரமாகக் கொள்வார்கள் - 37ஐ மீண்டும் முயற்சிக்கவும்.

19. இது சரியல்ல. ஏனெனில் நம்முடைய பிரச்னைகளுக்கு உண்மையான அசலான காரணத்தை நாம் நம்முடைய அறிவால் அறிந்து கொள்ள முடியாது, ஏனெனில் மனித அறிவு குறைபாடு உடையதாகும். எனவே கடவுளிடம் இருந்து பெறப்படும் அறிவே (Revealed Knowledge) சரியானதும், நம்பிக்கைக்குரியதும் ஆகும். எனவே நம்முடைய பிரச்னைகளுக்கு அசலான காரணம் கடவுள் பக்தி இல்லாமையும் பேச வேண்டியதை நேரடியாகவும் மிகச்சரியாகவும் கூறாமல் இருப்பதுமே ஆகும் என்றறிந்து கொள்கிறோம். இவற்றைச் செய்தால் பிரச்சனைகள் சீராகும் என்று இறைவன் வாக்களிப்பதிலிருந்து நாம் இதனை அறிந்து கொள்கிறோம். -21 க்குச் செல்லவும்

20. தவ்ராத் என்பது

a. மூஸாவுக்கு வழங்கப்பட்ட வேதம் -4க்குச் செல்லவும்

b . இஸ்ராயீலின் சந்ததியில் வந்த அனைத்து நபிமார்களுக்கும் வழங்கப்பட்ட வேதங்களின் தொகுப்பு. 6க்கு செல்லவும்

C. யூஸுஃப் நபிக்கு வழங்கப்பட்ட வேதம் -8க்குச் செல்லவும்

21. ஆம்! குர்ஆன் வசனம் (33:70,71)ல் கடவுள் கூறுவது. நம்பிக்கை கொண்டேரே, கடவுள் மேல் பக்தி கொள்ளுங்கள் மேலும் கூறுவதை நேரடியாக, மிகச்சரியாகக் கூறுங்கள். கடவுள் உங்கள் காரியங்களைச் சீர் செய்வார் மேலும் உங்கள பாவங்களையும் மன்னிப்பார். இவ்வசனத்தின்படி நம் முடைய காரியங்களைச் சீர் செய்யக் கூடியவர் கடவுள் மட்டுமே என்றும் இதில் கூறப் பட்டுள்ளபடி செய்தால் நம் காரியங்கள் சீர்பெறும் என்றும் வாக்களிக்கப் படுகிறோம். கடவுள் தன் வாக்குறுதிக்கு ஒருபோதும் மாறு செய்பவரில்லை. - 12க்குச் செல்லவும்

22. ஏமாந்து போகப் போகின்றீர்கள். எச்சரிக்கை. நீங்கள் உங்கள் இஷ்டப்படி வாழ்ந்து எல்லாத் தவறுகளிலிருந்தும் மீளாமல், இறந்து போனாலும் நல்லடியார்களின் சிபாரிசு மூலம் சுவர்க்கம் நுழைந்து விடலாம் என்று மனப்பால் குடிக்க வேண்டாம் இறைவனின் கோபத்திலிருந்து நல்லடியார்களின் சிபாரிசு மூலம் தப்பித்து விடலாம் என நீங்கள் எண்ணினால் நீங்கள் இணைவைப்பவர் என்று குர்ஆன் -(39:3) கூறுகின்றது. இணை வைத்த வண்ணம் இறந்து விடுபவர்கள் ஒரு போதும் சுவனம் நுழைய முடியாது என்றும் அது உங்களை எச்சரிக்கின்றது.

- 33ஐ மறுபடி முயற்சிக்கவும்

23. (4:48,116) Very Good குர்ஆனின் பல மொழிபெயர்ப்புக்களை ஒப்பிட்டுச் சிந்தித்துச் சீர்தூக்கி பார்க்கக் கூடியவராக நீங்கள் உள்ளீர்கள் வாழ்த்துக்கள்! ஏனெனில் கடவுள் குர் ஆனில் அறிவுடைமைக்கும் நேர் வழியுடைமைக்கும் அளவுகோலாகக் கூறுவது கூறப்படும் கருத்துக்களைச் செவியேற்று அவற்றில் சிறந்ததை எடுத்துச் செயல்படுவதைத் தான் (39:18) யூசுஃபின் விஷயத்தை அரசரிடம் கூற அவருடைய சிறைத் தோழன் மறந்த காரணத்தால் யூஸுஃப் சில காலம் அதிகமாக சிறையில் இருக்க வேண்டி வரவில்லை. ஆனால்! உண்மையில் யூஸுஃப் தன் இரட்சகரான கடவுளிடம் தன் கோரிக்கையை வைக்காமல் சிறைத் தோழனின் சிபாரிசை எதிர்பார்த்தது தான் அவருடைய தவறு அதனால்தான் அவர் சில காலம் அதிகமாக சிறையில் கழிக்கவேண்டி வந்தது என்பதே மிகச் சரியாகப் புரிந்து கொள்ளுதல் (Correct Understanding) ஆகும் -29க்குச் செல்லவும்

24. நீங்கள் குர் ஆன் மற்றும் ஆதாரபூர்வமான ஹதீஸ்களை மட்டும் பின்பற்றுவதாகக் கூறி கொள்கின்றவர். மத்ஹபுகளில் உள்ள மூடத்தனங்களை சிந்தித்துத் தவறென்று விளங்கி அதனை விட்டு விலகிய நீங்கள் ஹதீஸ்களில் உள்ள மூடத்தனங்களை ஏன் சிந்திக்க மறுக்கின்றீர்கள். அல்லாஹ்வுக்குத் தெரியாததையா அவலியாக்கள் சொல்லி சிபாரிசு செய்யப் போகிறார்கள்? என்று சிந்தித்த நீங்கள்முஹம்மத் நபி மட்டும் சிபாரிசு செய்வார் என்று நம்புவதன் அடிப்படை என்ன? கால் கிணறு தாண்டுவதும், அரைக்கிணறு தாண்டுவதும் ஏன் முக்கால் கிணறு தாண்டுவதும் ஒன்று தான் என்பதை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும் 33ஐ மீண்டும் முயற்சி செய்யவும்

25. நீங்கள் ஒரு யூதராகவோ அல்லது கிறித்துவராக இருக்கக் கூடும். ஏனெனில் அவர்கள் தான் இத்தகைய வீண் ஆசையைக் கொண்டிருப்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது (2 :111) இது தவறான பதில் -12க்குத் திரும்பவும்

26. மிக நன்று! மறுமையில் எல்லா சிபாரிசுகளும் கடவுளுக்கே உரியன ம என்றும் (39:43-44) கடவுளிடத்தில் நமக்காகப் பரிந்து பேசுவதற்கு (ஷஃபாஅத்) கடவுளைத் தவிர வேறு யாரும் இல்லை (32:4) என்றும் கடவுளிடம் இருந்து தப்பிப்பதற்கு கடவுளை விட்டால் (9:118) வேறு புகலிடம் இல்லை எனவும் உங்களுக்கு உணர்த்தியதற்கு நீங்கள் அவருக்கு நன்றியுடன் இருங்கள் -37ஐ முயற்சி செய்யுங்கள்

27. மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்று

a. தஜ்ஜால் எனும் ஒற்றைக் கண் அசுரனின் வருகை, -31க்கு செல்லவும்
b. யஃஜீஜ் (Yagog) மஃஜீஜ் (Magog) கூட்டத்தார் மீண்டும் தோன்றுதல் -38க்குச் செல்லவும்

28. தவறு. முஹம்மதியர்கள் தங்கள் மார்க்கத்தின் அடிப்படை எனக் கருதும் நபியை இணைத்த இந்த சாட்சிப் பிரமாணம் குர் ஆன் முழுதும் தேடினாலும். ஒரு இடத்தில் கூடக் கிடைக்காது. மேலும் இத்தகைய சாட்சிப்பிரமாணத்தைக் கூறுபவர்கள் நயவஞ்சகர்களே என்றும் (63:1) குர்ஆன் கூறுகிறது. நீங்கள் திருந்தி விலகிக் கொள்ள வேண்டாமா? -
39ஐ மீண்டும் முயற்சிக்கவும்

29. நம்முடைய காரியங்கள் சீர் பெற பிரச்சனைகள் தீர கடவுள் கூறும் வழி முறை என்ன ?

a கடவுள் மேல் பக்தி கொண்டு கூற வேண்டியதை நேரடியாக மிகச் சரியாகக் கூறுதல் -21க்குச் செல்க.

b. நம்முடைய அறிவைப் பயன்படுத்தி பிரச்சனைகளின் காரணங்களைக் கண்டுபிடித்து அவற்றைச் சரிசெய்ய வேண்டும் - 19க்குச் செல்லவும்

30. மிகவும் சரி மதங்கள் கடவுளை அடைவதற்காக உருவாக்கப்பட்டவையே. எனவே ஒருவர் எம்மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் மெய்யாகவே படைத்த கடவுளை நம்பி அவர் நம்மை விசாரிப்பார் என்று அஞ்சி நல்ல வாழ்வு வாழ முயற்சி செய்தால் அவர்களுக்கு நிச்சயம் நாம் நற்பேறு வழங்குவோம் என்று மதங்களைக் கடந்த. அனைத்து மனிதர்களுக்கும் பொதுவான. அவர்கள் அனைவரையும் படைத்த கடவுள் (2:62,5:69) வாக்களிக்கிறார். - 33க்கு நகரவும்.

31. மிகவும் ஆபத்தான தவறு! நீங்கள் பொய்யை நம்பிப் பின்பற்றிக் கொண்டு இருக்கின்றீர்கள். பொய்களைப் பின்பற்றுவோர் தங்கள் நற்செயல்களை வீணாக்கிக் கொண்டு உள்ளனர் (47:1-3) என்று கடவுள் எச்சிரிக்கிறார் மறுமை நாளின் அடையாளங்களை விவரித்துக் கூறும் குர் ஆனில் தஜ்ஜாலைப் பற்றிய சிறு குறிப்புக் கூட இல்லை -27ஐ மீண்டும் முயற்சிக்கவும்

32. புகழனைத்தும் கடவுளுக்கே. இறைவனைத் தனித்து நினைவு கூறும் அளவுக்கு உள்ள உறுதி, ஆன்மபலம் கொண்டவராக நீங்கள் உள்ளீர்கள் வாழ்த்துக்கள். இதுவே அனைத்தையும் அறிந்த கடவுள் கூறும் சாட்சிப் பிரமாணம். மேலும் வானவர்களும் அறிவுடையவர்களும் கூறும் சாட்சிப்பிரமாணமும் இதுவே. சாட்சிப் பிரமாணத்தில் கடவுளுடன் வேறு எவரையும் இணைப்பது நயவஞ்சகமும் இணைவைப்பும் ஆகும். (3:18, mai 47:19, 39:45) - 40க்குச் செல்லவும்.

33. மறுமையில் இறைவனிடத்தில் சிபாரிசு செய்யும் உரிமை பெற்றவர்

a. முஹம்மத் நபியும் மற்ற அவ்லியாக்களும் -22க்கு செல்லவும்

b. முஹம்மத் நபி மட்டுமே . -24க்கு செல்லவும்

c. எவரும் இல்லை , -26க்குக் செல்லவும்

34. நீங்கள் எனக்கு நன்றி செலுத்தினால் நான் உங்களுக்கு என் அருளை அதிகப்படுத்துவேன் என்று கடவுள் (14:7,4:147)ல் வாக்களிப்பதன் படி

நாம் கடவுளுக்கு நன்றி செலுத்தினால் நமக்கு அளிக்கப்பட்ட அருட்கொடைகளை அதிகப்படுத்திக் கொள்ள முடியும், கடவுள் அருள் புரிவாராக ! Bye.

35. நீங்கள் குர்ஆனின் கருத்தைப் பற்றிக் கவலை கொள்ளாத, பாரம்பர்ய முஸ்லிம்களில் ஒருவர். ஏனெனில் அவர்கள் தான் கடவுளிடத்தில் மார்க்கம் என்பது சரணடைதல் மட்டுமே (இஸ்லாம்) என்ற இறைவாக்கைத் தவறாகப் புரிந்து கொண்டு முஸ்லிம் சமூகத்தார் மட்டுமே சுவனம் செல்வார்கள் என்று யூதர்களையும், கிறித்துவர்களையும் போல் வீணாசை கொண்டுள்ளனர். அவர்கள் யூத கிறித்துவர்கள் செய்த அதே தவறைச் செய்து கொண்டுள்ளனர் -12க்குத் திரும்பவும்.

36. இந்த ஷஹாதத்தை நீங்கள் சரியானது என்று சொன்னால் நீங்கள் ஒரு ஷியா பிரிவைச் சேர்ந்தவர். இதில் சாட்சிப்பிரமாணத்தில் அலீயையும் சேர்த்திருப்பதால் இதனை ஏற்றுக் கொள்ள மறுக்கும் சுன்னத் ஜமாத்தினர் இறை சாட்சிப் பிரமாணத்தில் முஹம் நபியை மட்டும் சேர்ப்பது எவ்விதத்தில் நியாயம்? சுன்னத் பிரிவினர் நபியைச் சேர்த்தனர். ஷியாபிரிவினர் தங்களுக்கு மிகவும் பிரியமான அலியைக் சேர்த்தனர் - 39க்குத் திரும்பவும்

37. எந்தச் செயலை நாம் செய்து கொண்டிருக்கும் போது நம்மை வேதனை செய்வதில்லை என்று கடவுள் வாக்களிக்கின்றார்?

| | |
|---|---|
| a. பாவ மன்னிப்புத் தேடிக் கொண்டு இருக்கும் போது. | -16 க்குச் செல்லவும் |
| b. நோன்பு வைத்திருக்கும் போது | -18க்குச் செல்லவும் |

38. மிகவும் சரி. யஃஜூஜ், மஃஜீஜ் (Gog and Magog) எனும் தீய கூட்டத்தினர் மீண்டும் தோன்றுவது குர்ஆன் கூறும் மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்று என்பதையும் அவர்கள் 2270ம் ஆண்டு தோன்று வார்கள் என்பதையும் இப்போது நாம் அறிந்திருக்கின்றோம். பார்க்க பு.நி - 39க்குச் செல்லவும்

39. குர்ஆனில் கூறப்படும் சாட்சிப்பிரமாணம் (ஷஹாதத்)

| | |
|---|---|
| a. அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் வஅஷ்ஹது அன்ன முஹம்மதுர் ரசூலுல்லாஹ் | 28-க்கு செல்லவும் |

தொடர்ச்சி முதல் பக்கம்...

# கருணைக் கடவுள்

NAJ ABUESA - DUBAI

இவ்வுலக வாழ்க்கையில், சிலர் சிலர் மீது சில பொருள்கள் மீது அன்பு கொள்வது, விருப்பம் கொள்வது என்பது வழக்கமானதே அன்பு நேசமிகு எண்ணத்தை. ஆழமான பாசத்தை மிகுதியான முன்னுரிமையை அல்லது ஒரு விதமான மகிழ்ச்சி வெளிபடுத்தக் கூடிய விளக்க கூடிய சாதனமாக இருக்கிறது ஒருவர் எதை வேண்டு மானாலும் எவரை வேண்டுமானாலும் அன்புக்குரிய வராக அன்புக்குரியதாக தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும்

சில நேரங்களில் அன்பு ஒரு தன்மையாக ஒரு பண்பாக, ஒழக்க நெறியாக, பயன்தரக் கூடியதாக இருக்கிறது. உதாரணமாக, உடற்பயிற்சி செய்வதற்கோ , அறிவைத் தேடுவதற்கோ ஒருவர் ஆசை கொண்டு அதன் மீது கவனம் வைத்தாரென்றால் அது அவருக்கு சில பயன்கள் தரக்கூடும் சிலநேரங்களில் அன்பு தீமை பயக்க கூடியதாக இருக்கிறது உதாரணமாக ஒருவர் போதை வசப்படுவதற்கோ, தவறான செயல்களைச் செய்வதற்கோ, ஆசை கொண்டால் அது மிகப் பெரும் அழிவையும் நஷ்டத்தையும் தரக்கூடியதாக அமைந்து விடும், ஆசை கொள்ளுதற்கோ அன்பு செலுத்துதற்கோ உரிய காரணங்கள் மிகவும் வெளிப்படையானது.

தங்களுடைய நோக்கத்தை கருத்தை பலப்படுத்த அவற்றுக்கு உறுதுணையாக இருக்க எவரெல்லாம் எவையெல்லாம் பயன் படுகின்றனவோ, உதவுகின்றனவோ, அதை பலர் தங்களுக்கு அன்புக்குரியதாக அன்புக்குரிய வராக கருதுகின்றனர். நிச்சயமாக மக்கள் தங்களுடைய சொந்த விருப்பங்களுக்கு மாறான, எதிரான எதையும் தங்களது அன்புக்குரியதாக, நேசத்துக்குரியதாக தேர்ந்தேடுக்க மாட்டார்கள், ஆக ஒரு மனிதனின் நோக்கம் ஆரோக்கியமாக வாழவேண்டும் என இருந்தால் அவர் புகை பிடிக்கவோ, மது அருந்தவோ ஆசை கொள்ளமாட்டார். ஒரு மனிதரின் நோக்கம் பொழுது போக்காக இருக்க வேண்டும் என இருந்தால் அவர் விளையாடுவதிலும் படங்கள் பார்ப்பதிலும் பல ஊர்கள் சென்று சுற்றிப் பார்ப்பதிலும் ஆர்வம் கொள்வர் ஆசை கொள்வர்

ஒருவர் இந்த அன்பு, நேசம் பாசம், கருணை ஆகியவற்றுக்கான விளக்கத்தை, தெளிவை புரிந்து கொண்டு நினைவிலிருத்திக் கொண்டா லொழிய அவரால் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ள இயலாது.

நம்மைப் படைத்தவர் மிக்க கருணையுடையவராக அன்பு செலுத்தக் கூடிய வராக இருக்கிறார் மக்களில் பெரும்பான்மையோரிடத்தில் இஸ்லாத்தின் கடவுள் அன்பு செலுத்தக் கூடியவர் இல்லையோ என்ற மாயை இருக்கிறது இது அடிப்படை உண்மையற்றது.

முதலாவதாக இஸ்லாத்தின் கடவுள் என்ற மேலெழுந்தவாரியான எண்ணமே தவறானது இஸ்லாத்தின், முஸ்லிம்களின் இறைவன் முழுமனித இனத்தின் கடவுளாகவே இருக்கிறார். அவர்கள் தங்களை யூதர்கள் என்றோ, கிற்ஸ்துவர்கள் என்றோ, இந்துக்கள் என்றோ, புத்தர்கள் என்றோ எவ்வாறாக தங்களை அழைத்துக் கொண்டாலும் அவர்களுக்கும் உரிய இறைவனாகவே இஸ்லாத்தின் கடவுள் இருக்கிறார்.

இரண்டாவதாக, குர் ஆன் மட்டும் உண்மையான இஸ்லாத்தின் வேதமாக இருப்பதினாலும் அது இறைவனின் சொல்லாக இருப்பதினாலும் நாம் குர்ஆனிலிருந்தே இறைவன் கருணையானவரா? இல்லையா? என்பதை காணமுற்பட வேண்டும்

இறைவேதமாகிய புனித குர் ஆனின் பார்வையில், அதன் நடைமுழுவதும் இறைவனுடைய அன்பு, கருணை பல நேரங்களில், பல இடத்தில் வலியுறுக்கப்பட்டும், வெளிப்படுத்தப்பட்டும் இருக்கிறது. இறைவன் யாரையெல்லாம் நேசிக்கிறார்!? அவர். நன்மை செய்வோரை (2:195) நேர்வழி நடப்பவரை (3:76), பொறுமையாளரை (3 : 148),

தூய்மையானோரை தன்னிடமே நம்பிக்கை கொண்டவரை (3:159) மன்னிக்க கூடியவர்களை ( 5:13) தங்களைத் தாங்களே சுத்திதரிக்க கூடியவர்களை (9:103) நீதியானவர்களை (49:9, 5:42, 2:222) அவருடைய நோக்கத்திற்தாக பாடுபடுவோரை (61:4) என்று பலரை, பல இடங்களில் நேசிப்பதாக குர் ஆன் குறிக்கிறது.

இத்தகைய குணங்கள் தான் இறைவனுடைய அன்பை, கருணையை பெற உதவுகிறது. காரணம் இது தான் அவருடைய நோக்கத்திற்கு உறுதுணையாக அமைதிக்கு உத்திரவாதமளிக்க கூடியதாக நேசமிகு, பொறுப்பு

மிக்க ஒருவருக்கொருவர் நன்மையை உற்சாகப்படுத்தி ஊக்குவிக்க கூடிய அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், உறவினர்களுக்கும், அடுத்துள்ளவர்களுக்கும் தெரியாத வருக்கும், ஒருவர் மற்ற ஒருவர்க்கும் உதவக்கூடிய தனது கவனத்தை தரக்கூடிய ஒரு நம்பிக்கை கொண்ட சமூகத்தை உருவாக்க கூடியதாக இருக்கிறது. அதே நேரத்தில் நாம் ஒன்றை கவனம் கொள்ள வேண்டும். இறைவன் நாடினால் அனைவரும் அவருடைய நோக்கத்திற்கு உதவக் கூடிய வர்களாகவும், அவரின் அன்பை பெறக்கூடியவர்களாகவும் ஆகிவிடலாம்.

ஆனால் மிக்க கருணையாளரான அவர் நமக்கு சுதந்திரத்தை, பகுத்தறிவை நாம் கோரிய பிரகாரம் நமக்கு அளித்துள்ளார் அவருடைய எளிதான மிகவும் தெளிவான கட்டளைகளை செயல்படுத்தாமல் , இறைவனுக்குத் துணை நில்லாமல், இந்த உலகத்தில் கேடுகளை விளைவிக்ககூடிய செயல்களை எவர் செய்கின்றனரோ அவர் இறைவனுடைய அன்பைப் பெற தவறி விடுகிறார். அவர்களால் மறுமை நாளில் இறைவனுடைய அருகாமையில் செல்ல முடியாது. இறைவனுடைய அருகாமையில் இருந்து விலகி நிற்பதே அவர்களுக்கு நரகமாக இருக்கிறது.

இறைவன் எவர் ஒருவரையும் நரகின் படு குழியில் தானே தள்ளவிடுவதிலிலை - மாறாக இறைவன் தமக்கு பலகட்டளைகளை அவரை நேசிக்கவும், அடையவும், அவருடைய செய்தியின் வழி நடக்கவும் தந்து மறுமையில் அவருடைய அருகாமையில் நம்மை அடையச் செய்து உதவுகிறார் நமக்கு அருளப்பட்ட சுதந்திரத்தினாலும், பகுத்தறிவாலும் நாமே நமக்கு தேவையான, நமக்குத் தகுதியான நரகத்தையோ, சொர்க்கத்தையோ தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை கிடைக்கிறது.

மற்றுமொரு மிகப்பெரிய தவறான புரிந்து கொள்ளுதலும் உலகத்தாரிடையே நிலவுகிறது அது இறைவன் அனைத்தையும் அனைவரையும் நேசிப்பவராக இருக்க வேண்டும், இருக்கிறார் என்பது தான். இது உண்மையில் வாதத்திற்கு கூட ஒத்துவராததாக இருக்கிறது. ஏன் இறைவன் இந்த பூமியை நாசமாக்குபவர்களை ஏதும் அறியா மக்களை கொல்பவர்களை, இயலாதவர்களையும், பலவீன மானவர்களையும். துன்புறுத்துபவர்களையும், மக்களின் உடமைகளை, சுதந்திரத்தை சூறையாடுபவர்களையும் நமது சுற்றுப்புறத்தை மாசுபடுத்துபவர்களையும் இன்னும் பெண்களையும் சிறுமிகளையும்

பலாத்காரம் செய்பவர்களையும் நமது பிள்ளைகளை கொடுமைப்படுத்துவோரையும் நேசிக்க வேண்டும்? ஏன் ஹிட்லரையோ, ஸ்டாலினையோ, போல்வால்ட்டையோ, இன்னும் பிற கொடுங்கோலர்களையோ நேசிக்க வேண்டும்? இவர்கள் அனைவரும் நமது மனித குலத்தின் எதிரிகள் இன்னும் நமது இறைவனின் எதிரிகள். சிலர் தீயவற்றையும் அவதூறுகளையும் அள்ளித் தெளித்த வண்ணம் இருப்பர். சிலர் படைத்தவரும், நமக்கு கொடுப்பவரும் ஆகிய இறைவனை நம்பாது அவருடைய கட்டளைகளை மதிக்காது இருப்பர்.

நம்மை இறைவன் எவ்வித நிபத்தனையுமின்றி நேசிப்பாரேயானால் ஏன் நமக்கு அளித்த கட்டளைகளை நாம் நிறைவேற்ற வேண்டும் ? எதற்காக இறைவன் நமக்கு வேதங்களையும் ஒழுங்குகளையும் கற்றுத்தர வேண்டும் நாம் கட்டுபாட்டுடன், நேர்மையுடன் வாழ வேண்டியதன் அவசியம் என்ன? இன்னும் அவர் நம்மை எவ்வித நிபந்தனையும் இன்றி நேசிப்பாரேயானால்; நம் அனைவருக்கும் தீயவற்றை செய்வதற்கு தேவையான அங்கீகாரமும் கிடைத்து சொர்க்கமும் வாக்களிக்கப்பட்டால் இந்த உலகமே குழப்பங்களின் கூடாரமாகவும், ஒழுக்கமற்ற அமைப்பாகவும் மாறி நாம் நாகரீகமும் பண்பாடும் அற்ற சமூகமாக கீழான மக்களாகி விடுவோம் என்பது தெளிவான உண்மை. இந்த இடத்தில் தான் விஷயத்தில் தான் நமக்கு உண்மை எது என்பதனை குர்ஆன் உணர்த்துகிறது.

எவ்வெவ்விதமான குணாதிசயங்களை நமது இறைவன் விரும்புவதில்லை என்று தனது வேதமான குர்ஆனில் அவர் திட்டமிட்டு வரையறுக்கிறார். அவை : பிறருடைய உரிமைகளை மறுப்பவர்களை (2:190) கலகம் செய்பவர்களை (12:205) அநியாயம் செய்பவர்களை (3:140) கர்வமுடையவர்களை, பெருமை அடிப்பவர்களை (4:36) கொடியவர்களை, நமபிக்கைத் துரோகிகளை, சதி செய்பவர்களை (4:107) தீயவர்களை, குழப்பம் செய்பவர்களை (5:64) வீண்விரயம் செய்பவர்களை (6:141) ஊதாரிகளை (7:31) வரம்பு மீறுபவர்களை (7:55) நிராகரிப்பாளர்களை (3:32) அகந்தை கொள்பவர்களை (57:23) நமது இறைவன் நேசிக்க மாட்டார் என தெளிவாக விளக்குகிறார்.

இப்பொழுது நம்மிடம் இறைவன் எதை விரும்புகிறார், எதை விரும்புவதில்லை என்ற உண்மையை தெளிவுபடுத்த அவர் வேதத்தின் மூலம் முயற்சித்தோம். நாம் செய்யும் நல்லவற்றிற்காக நமது இறைவன் நம்மை விரும்புகிறார். இன்னும் தீயது செய்யும் கொடியவர்களை அவர் நேசிப்பதில்லை.

இறைவன் மிகுந்த கருணையாளர், இரக்கமுடையவராதலால் தீயது செய்யும் மனிதர்களுக்கும் தனது கருணைக் கதவுகளை திறந்தே வைத்திருக்கிறார். அவர்களுக்கு திருந்த, மனம் வருந்த, அவரிடம் திரும்ப பல வாய்ப்புக்களை அவர் அளிக்கிறார். தங்களின் வாழ்வின் கட்டத்திலேயே அவர்கள் இதைச் செய்தார்களேயானால் அவர்கள் இறைவனால் மன்னிப்பையும், வழிகாட்டுதலையும், மறுஉலகின் நிரந்தரமான மகிழ்ச்சியையும், இவ்வுலகில் அமைதி வாழ்வையும் வாக்களிக்கப்படுகிறார்கள்,

இதுதான் உண்மையான நேசம், உண்மையான, வளப்படுத்தக் கூடிய அன்பு, நிபந்தனையற்ற சிதைவுக்குள்ளாக்க கூடிய அழிவுப்பாதையில் அழைத்துச் செல்லக் கூடிய அன்பல்ல.

நமக்கு இவ்வுலகிலும் மறுமையிலும் நாம் நிம்மதியாக, வளமாக, மகிழ்ச்சியாக இருப்பதற்குரிய அனைத்து விதமான காரணங்களையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்த நம் இறைவனுக்கு நாம் மிகுந்த நன்றியும் கடமையும் பட்டுள்ளோம் அவருடைய அன்பு அளவிட முடியாததாக இருக்கிறது அதை நாம் அடைந்து கொள்ள முயற்சித்தல் நம்மிடமே இருக்கிறது. அன்பும், அருளும், கருணையும், இரக்கமும் கொண்ட இறைவனுக்கே எல்லாம் புகழும்

வெளிப்பாடுகளின் காலவரிசைப் பட்டியல்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Order Sura | 17............107 | 34............ 50 | 51............ 10 | 68............ 88 | 85............ 29 | 102............ 24 |
| 1............ 96 | 18............109 | 35............ 90 | 52............ 11 | 69............ 18 | 86............ 83 | 103............ 22 |
| 2............ 68 | 19............105 | 36............ 86 | 53............ 12 | 70............ 16 | 87............ 2 | 104............ 63 |
| 3............ 73 | 20............113 | 37............ 54 | 54............ 15 | 71............ 71 | 88............ 8 | 105............ 58 |
| 4............ 74 | 21............114 | 38............ 38 | 55............ 6 | 72............ 14 | 89............ 3 | 106............ 49 |
| 5............ 1 | 22............112 | 39............ 7 | 56............ 37 | 73............ 21 | 90............ 33 | 107............ 66 |
| 6............111 | 23............ 53 | 40............ 72 | 57............ 31 | 74............ 23 | 91............ 60 | 108............ 64 |
| 7............ 81 | 24............ 80 | 41............ 36 | 58............ 34 | 75............ 32 | 92............ 4 | 109............ 61 |
| 8............ 87 | 25............ 97 | 42............ 25 | 59............ 39 | 76............ 52 | 93............ 99 | 110............ 62 |
| 9............ 92 | 26............ 91 | 43............ 35 | 60............ 40 | 77............ 67 | 94............ 57 | 111............ 48 |
| 10............ 89 | 27............ 85 | 44............ 19 | 61............ 41 | 78............ 69 | 95............ 47 | 112............ 5 |
| 11............ 93 | 28............ 95 | 45............ 20 | 62............ 42 | 79............ 70 | 96............ 13 | 113............ 9 |
| 12............ 94 | 29............106 | 46............ 56 | 63............ 43 | 80............ 78 | 97............ 55 | 114............110 |
| 13............103 | 30............101 | 47............ 26 | 64............ 44 | 81............ 79 | 98............ 76 | |
| 14............100 | 31............ 75 | 48............ 27 | 65............ 45 | 82............ 82 | 99............ 65 | |
| 15............108 | 32............104 | 49............ 28 | 66............ 46 | 83............ 84 | 100............ 98 | |
| 16............102 | 33............ 77 | 50............ 17 | 67............ 51 | 84............ 30 | 101............ 59 | |

இதுவும் இறைவனால் அமைக்கப்பட்டது என்பதற்கான சான்றுகள்.

1. குர்ஆனின் முதல் அத்தியாயம் துவங்கி, அதன் வெளிப்பாடு வரிசை எண்ணை (5) யும், அதைத் தொடர்ந்து அத்தியாய எண்ணையும் ( I ) எழுதியபடி தொடர்ந்து சென்றால், அது 468-டிஜிட் கொண்ட ஒரு நீண்ட எண் ஆக பரிணமிக்கும். கீழ்க்காணும் அவ்வெண் ஒரு 19ன் பெருக்குத் தொகையே 5 1 87 2 89 3 92 4 112 5 .......... 20 113 21 114 = xxx X 19

2. வெளிப்பட்ட முதல் அத்தியாயம் துவங்கி (96) அதன் அத்தியாய எண்ணையும் (96), அதைத் தொடர்ந்து அதன் வசன எண்ணிக்கையையும் (19), அதைத் தொடர்ந்து அதன் வெளிப்பாட்டு வரிசை எண்ணையும் (I) எழுதியபடி தொடர்ந்து சென்றால், அது 695-டிஜிட் கொண்ட ஒரு நீண்ட எண்ணாக முடியும். கீழ்க்காணும் அவ்வெண் 19-ன் பெருக்குத் தொகையே. 96 19 1 68 52 2 73 20 3 74 56 4 17 5 9 127 113 110 3 114 = xxx X 19

| அமைவது சாதாரணம் | அமைவது அசாதாரணம் |
|---|---|
| அத்தி எண் | வெளிப்பாட்டு வரிசை எண் |
| 19 | 44 |
| 38 | 38 |
| 57 | 94 |
| 76 | 98 |
| 95 | 28 |
| 114 | 21 |
| 399=19X21 | 323=19X17 |

சகோதரி இஹ்ஸான் அத்தியாய எண்களுக்கும் அதன் வெளிப்பாட்டு வரிசை எண்ணுக்கும் உள்ள கீழ்க்கண்ட ஒற்றுமையைக் கண்டுபிடித்தார். அடிப்படையில், குர்ஆனில் உள்ள ஒவ்வொரு 19வது அத்தியாயத்தையும் எடுத்துக் கொண்டார் அவை 19.38.57.76.95.1 1 4. பின்னர் அவர் அவற்றுக்குரிய வெளிப்பாட்டு வரிசை எண்ணையும் எழுதிக் கூட்டினார்.

இடப்பக்கத்தில் உள்ள எண்கள் அனைத்தும் 19ன் பெருக்குத் தொகையாக உள்ளதால் அவற்றின் கூட்டுத்தொகையும் 19ன் பெருக்குத் தொகையாக இருக்க வேண்டும் என்பது கணித விதி, ஆயினும் வலப்பக்க வரிசையில் உள்ள எண்களின் கூட்டுத் தொகையும் 19ன் பெருக்குத் தொகையாக அமைந்திருப்பது, நிச்சயமாக மிகவும் அசாதாரணமானதாகும். மேலும் இது வெளிப்பாட்டு வரிசையும் இறைவனால் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதையும் குறிக்கின்றது.

# அல்-குர்ஆன் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மொழி பெயர்ப்பும், அதன் தமிழாக்கமும்

**Sura 2: The Heifet (Al-Baqarah)**

**அத்தியாயம் - 2 : பசுங்கன்று (அல்பகறா)**

*God Answer the Prayers of " His Servants"*

وَاِذَا سَاَلَكَ عِبَادِىْ عَنِّىْ فَاِنِّىْ قَرِيْبٌ اُجِيْبُ دَعْوَةَ
الدَّاعِ اِذَا دَعَانِ فَلْيَسْتَجِيْبُوْا لِىْ وَلْيُؤْمِنُوْا بِىْ
لَعَلَّهُمْ يَرْشُدُوْنَ

186. When My servants ask you about Me, I am always near. I answer their prayers when they pray to Me. The people shall respond to Me and believe in Me, in order to be guided.

186.என்னுடைய ஊழியர்கள் என்னைப் பற்றி உம்மிடம் கேட்கும் போது, நான் எப்போதும் அருகிலேயே உள்ளேன். அவர்கள் என்னிடம் பிரார்த்திக்கும் பொழுது அவர்களுடைய பிரார்த்தனைக்கு நான் பதிலளிக்கின்றேன். வழிநடத்தப்பட்டவர்களாக இருக்கும் பொருட்டு, மக்கள் எனக்குப் பதிலளிக்கவும் என் மீது நம்பிக்கை கொள்ளவும் வேண்டும்.

اُحِلَّ لَكُمْ لَيْلَةَ الصِّيَامِ الرَّفَثُ اِلٰى نِسَآٮِٕكُمْ هُنَّ لِبَاسٌ
لَّكُمْ وَاَنْتُمْ لِبَاسٌ لَّهُنَّ عَلِمَ اللّٰهُ اَنَّكُمْ كُنْتُمْ تَخْتَانُوْنَ
اَنْفُسَكُمْ فَتَابَ عَلَيْكُمْ وَعَفَا عَنْكُمْ فَالْـٰٔنَ بَاشِرُوْهُنَّ
وَابْتَغُوْا مَا كَتَبَ اللّٰهُ لَكُمْ وَكُلُوْا وَاشْرَبُوْا حَتّٰى يَتَبَيَّنَ
لَكُمُ الْخَيْطُ الْاَبْيَضُ مِنَ الْخَيْطِ الْاَسْوَدِ مِنَ الْفَجْرِ ثُمَّ
اَتِمُّوا الصِّيَامَ اِلَى الَّيْلِ وَلَا تُبَاشِرُوْهُنَّ وَاَنْتُمْ عٰكِفُوْنَ فِى
الْمَسٰجِدِ تِلْكَ حُدُوْدُ اللّٰهِ فَلَا تَقْرَبُوْهَا كَذٰلِكَ يُبَيِّنُ اللّٰهُ
اٰيٰتِهٖ لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَّقُوْنَ

187. Permitted for you is sexual intercourse with your wives during the nights of fasting. They are the keepers of your secrets, and you are the keepers of their secrets. God knew that you used to betray your souls, and He has redeemed you, and has pardoned you. Henceforth, you may have intercourse with them, seeking what God has permitted for you. You may eat and drink until the white thread of light becomes distinguishable from the dark thread of night at dawn. Then, you

106.நோன்புக் கால இரவுகளின் போது உங்கள் மனைவியருடன் உங்களுக்குத் தாம்பத்ய உறவு அனுமதிக்கப்படுகின்றது. அவர்கள் உங்களுடைய இரகசியங்களைப் பாதுகாப்பவர்களாக இருக்கின்றனர், மேலும் நீங்கள் அவர்களுடைய இரகசியங்களைப் பாதுகாப் பவர்களாக இருக்கின்றீர்கள். நீங்கள் உங்களுடைய ஆத்மாக்களுக்குத் துரோகமிழைத்துக் கொண்டிருந்தீர்கள் என்பதைக் கடவுள் அறிந்திருந்தார், மேலும் அவர் உங்களை மீட்டுக் கொண்டார், அத்துடன் உங்களைப் பிழை பொறுத்துக் கொண்டார். இனிமேல், கடவுள் உங்களுக்கு

shall fast until sunset. Sexual intercourse is prohibited if you decide to retreat to the masjid (during the last ten days of Ramadan). These are God's laws; you shall not transgress them. God thus clarifies His revelations for the people, that they may attain salvation.

அனுமதித்ததைத் தேடியவர்களாக, நீங்கள் அவர்களுடன் தாம்பத்ய உறவு கொள்ளலாம். விடியலின் போது இரவின் கருப்பு நூலில் இருந்து வெளிச்சத்தின் வெள்ளை நூலானது தெளிவாகத் தெரிகின்றவரை நீங்கள் உண்ணவும் பருகவும் செய்யலாம். பின்னர், சூரிய அஸ்தமனம் வரை நீங்கள் நோன்பிருத்தல் வேண்டும். (ரமளானின் கடைசிப் பத்து நாட்களின் போது) பள்ளிவாசலில் அடைக்கலமாகிக் கொள்ள நீங்கள் தீர்மானித்தால் தாம்பத்ய உறவு தடை செய்யப்படுகின்றது. இவை கடவுள்-ன் சட்டங்களாகும்; நீங்கள் அவற்றை வரம்பு மீற வேண்டாம். கடவுள் இவ்விதமாகத் தன்னுடைய வெளிப்பாடுகளை மக்களுக்குத் தெளிவுபடுத்துகின்றார், அவர்கள் ஆன்ம மீட்சியடையும் பொருட்டு.

*Bribery Corruption Condemned*

**லஞ்ச ஊழல் கண்டனம் செய்யப்படுகிறது.**

وَلَا تَاْكُلُوْٓا اَمْوَالَـكُمْ بَيْنَكُمْ بِالْبَاطِلِ وَتُدْلُوْا بِهَآ اِلَى الْحُكَّامِ لِتَاْكُلُوْا فَرِيْقًا مِّنْ اَمْوَالِ النَّاسِ بِالْاِثْمِ وَاَنْتُمْ تَعْلَمُوْنَ

188. You shall not take each others' money illicitly, nor shall you bribe the officials to deprive others of some of their rights illicitly, while you know.

188. நீங்கள் ஒருவர் மற்றவரின் பணத்தைச் சட்ட விரோதமாக அபகரித்துக் கொள்ள வேண்டாம், அன்றியும் நீங்கள் அறிந்திருக்கும் நிலையில், மற்றவர்களின் உரிமைகளில் சிலவற்றைச் சட்ட விரோதமாகப் பறித்துக் கொள்வதற்காக, அதிகாரிகளுக்கு நீங்கள் இலஞ்சமளிக்கவும் வேண்டாம்.

**அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய இறைவனின் திருப்பெயரால்**

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கிணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங்களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக்குள்ளேயே கொண்டதாக இருக்கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணிதல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

ஓர் உலகம்
ஓர்-இறை
ஒரே செய்தி

Book - Post

To

*If undelivered Please return to*

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662